செய்தி வெளியீடு எண்.486 நாள்: 15.8.2009

மக்கள் நல்வாழ்வுத் துறை

# அரசு செய்தி வெளியீடு

இந்தியாவில் A H1N1 வைரஸ் நோய் பல மாநிலங்களில் பரவிவருகிறது. இந்த நோயினால் சிலர் இறந்துள்ளனர். தமிழ்நாட்டில் நான்கு வயது சிறுவன் ஒருவன் இறந்துள்ளார். இதனால் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் பலர் தங்களைப் பரிசோதனை செய்துகொள்ள கிண்டி கிங் ஆய்வுக்கூடத்திற்கு தினமும் அதிக எண்ணிக்கையில் வருகின்றனர். அதிக எண்ணிக்கையில் பொதுமக்கள் பரிசோதனைக்கு வருவதால், பரிசோதனை முடிவு அறிக்கை கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. காய்ச்சல் கண்டுள்ள எல்லோரும் பரிசோதனை செய்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஸ்வைன் ப்ளூ நோயின் அறிகுறிகள் தென்பட்டால் மட்டுமே தொண்டைக்குழி திசு மற்றும் சுவாசக் குழாய் திசு மாதிரிகள் எடுத்து பரிசோதனை செய்துகொள்ளவேண்டும். அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்கள் மற்றும் ஆய்வக நுட்பனர்களுக்கு எவ்வாறு மாதிரிகள் எடுக்கவேண்டும் என்பது பற்றி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மாதிரிகள் எடுப்பதற்குத் தேவையான மருத்துவப் பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன. அரசு மருத்துவமனைகளிலேயே மாதிரிகள் எடுக்கப்பட்டு கிண்டி கிங் ஆய்வு நிலையம், வேலூர் கிறுத்துவ மருத்துவக் கல்லூரி மற்றும் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைகளுக்கு பரிசோதனைக்காக அனுப்பப்படும்.

ஸ்வைன் ப்ளூ நோயின் மாதிரிகளை பரிசோதனை செய்யும் வசதிகள் உள்ள தனியார் ஆய்வுக்கூடங்களையும், ஸ்வைன் ப்ளூ மாதிரிகளை பரிசோதனை செய்ய அங்கீகரிக்கலாம் என மத்திய அரசு மாநில அரசுகளை கேட்டுக்கொண்டுள்ளது. அதன்பேரில் விருப்பம் தெரிவிக்கும் தனியார் ஆய்வுக்கூடங்களை ஆய்வுசெய்ய ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு தனியார் ஆய்வுக்கூடங்களை ஆய்வு செய்து பரிந்துரை செய்ததின்பேரில், ஸ்வைன் ப்ளூ

மாதிரிகளை பரிசோதனை செய்து அறிக்கை கொடுக்க முதல் கட்டமாக கீழ்க்கண்ட ஐந்து தனியார் ஆய்வுக்கூடங்களை அரசு அங்கீகரித்துள்ளது.

1. பாரத் ஸ்கேன்ஸ் பிரைவேட் லிமிடெட், ராயப்பேட்டை, சென்னை.
2. ஹைடெக் டையக்னாஸ்டிக் சென்டர், தி. நகர், சென்னை.
3. டையக்னாஸ்டிக் சர்வீசஸ், பர்கிட் ரோடு, தி.நகர், சென்னை.
4. மைக்ரோ லேப், கௌலி பிரவுன் ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்.
5. டாக்டர் ராத்'ஸ் லேப் (டாக்டர்ஸ் டையக்னாஸ்டிக் சென்டர்), தில்லை நகர், திருச்சி.

இக்குழு மேலும் சில தனியார் ஆய்வுக்கூடங்களை ஆய்வு செய்து வருகிறது. குழு அளிக்கும் அறிக்கையின் பேரில் மேலும் சில தனியார் ஆய்வுக்கூடங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட உள்ளது.

ஸ்வைன் ப்ளூ காய்ச்சல் அறிகுறிகள் உள்ளவர்கள் அவர்கள் விரும்பினால் அரசால் அங்கீகரிக்கப்பட்ட மேற்கண்ட தனியார் ஆய்வுக்கூடங்களில் தொண்டைக்குழி திசு மற்றும் சுவாசக் குழாய் திசு மாதிரிகளை பரிசோதனை செய்துகொள்ளலாம்.

வி.கு. சுப்புராஜ்
முதன்மைச்செயலர்

***********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.